**OS No.104/2017**
DW 1 – பாலமுருகன்

நாள் 16.03.2026

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 ஆவணம் சோனைமுத்துசெட்டியாரிடம் இருந்து முத்துராஜா தேவர் கிரயம் வாங்கிய கிரயப்பத்திரம் ஆகும். அந்த கிரயப்பத்திரம் சர்வே எண் 141/6 க்கானதாகும். தாவா சொத்தின் சர்வே எண் 149/6 பி, என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 14 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். அந்த கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள சர்வே எண் 149/6 ஏ, என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 15 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின்படி தாவா சொத்தை கிராம நிர்வாக அலுவலர் , சர்வேயர் ஆகியோர் அளவீடு செய்தனர் என்றால் சரிதான். அந்த சர்வேயில் சர்வே எண் 149/6 ஏ, மற்றும் சர்வே எண் 149/6 பி ஆகியவைகளை தனித்தனியாக அளந்து காட்டினர் என்றால் சரிதான்.

தாவாச் சொத்தை சமூகம் நீதிமன்றத்தில் இருந்து நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையாளர் சர்வேயர் மற்றும் வி.ஏ,ஓ ஆகியோர் உதவியுடன் புலத்தனிக்கை செய்து அளவீடு செய்து சர்வே எண் 149/6 ஏ, மற்றும் சர்வே எண் 149/6 பி ஆகியவைகளை தனித்தனியாக அளந்து காட்டினார் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 14 ஆவணம் என் மனைவி பெயருக்கு கிரயம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தை கீழபசலை கிராமத்தை சேர்ந்த ராக்கு என்பவர் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். ராக்கு என்பவரும் வள்ளி என்பவரும் சகோதரிகள் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 14 கிரய ஆவணத்தை என் மனைவி வாங்குவதற்கு முன்பு பி.வா.சா.ஆ 2 மற்றும் பி.வா.சா.ஆ 12 மற்றம் பி.வா.சா.ஆ 6 முதல் 8 ஆவணங்களைப் பார்த்து தான் கிரயம் வாங்கினார். என் மனைவி கிரயம் வாங்கும் போது நடப்பு 10 ( 1 ) ஐ பார்த்தோம்.

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் சர்வே எண் 149/6 என்பது கடந்த 14.04.1988 ம் தேதியில் சர்வே எண் 149/6 ஏ, மற்றும் சர்வே எண் 149/6 பி என உட்பிரிவு செய்யப்பட்டு அதில் சர்வே எண் 149/6 ஏ – க்கு பட்டா எண் 450 ராக்கு என்றும், சர்வே எண் 149/6 பி – க்கு பட்டா எண் 451 வள்ளி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 15 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்யும் போதே மேற்படி புல எண் 149 என்பது சர்வே எண் 149/6 ஏ, மற்றும் சர்வே எண் 149/6 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கும் என் மனைவிக்கும் தெரியும் என்றால் சரிதான்.

நான் தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள பட்டா மாறுதலை ரத்து செய்யக்கோரி சிவகங்கை கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மனுவில் உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த கோட்டாட்சியர் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தான சர்வே எண் 149/6 பி – ல் தான் வட்டக்கிணறு, மோட்டார் பம்பு செட் உள்ளது என்றும் தாவா சொத்தை அளவீடு செய்த பின்னால் தெரிவித்த விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அவர் அவ்வாறு சொல்லவில்லை.

சர்வே எண் 149/6 என்பது சர்வே எண் 149/6 ஏ என்றும், சர்வே எண் 149/6 பி என்றும், 1988 லேயே உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். சர்வே எண் 149/6 பி ல் தான்

வட்டக்கிணறு, மோட்டார் பம்பு செட் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

என் மனைவி கிரயம் வாங்கிய பி.வா.சா.ஆ 14 கிரய ஆவணத்தில் சர்வே எண் 149/6 ஏ – ல் வட்டக்கிணறு, மோட்டார் பம்பு செட் உள்ளதாக தவறுதலாக கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. சொத்தை அளந்து பார்க்காமல் தவறான கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் எதிர்வாதம் செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் 149/6 பி என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 149/6 பி என்பது எனக்குத் தெரியும்.

உங்கள் எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும் வழக்குச் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.